# நடப்பு நிகழ்வுகள்- ஜுலை 28 - 2017

- உலக கல்லீரல் அழற்சி நாள் (World Hepatitis Day) - ஜுலை 28

- பிரதமர் மோடி அப்துல்கலாம் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளான ஜுலை 27 அன்று இராமேஸ்வரத்தில் ஐயா அவர்களின் நினைவு மண்டபத்தை திறந்து வைத்தார். டி.ஆர்.டி.ஓ எனும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் 16.5 கோடி ரூபாயில் அமைத்துள்ளது.

- ஒடிசா மாநிலத்தில் உள்ள வீலர் தீவுக்கு (Wheeler Island) Dr.அப்துல் கலாம் பெயரை அந்த மாநில அரசு (27.7.17) சூட்டியுள்ளது. இனி இத்தீவு அப்துல் கலாம் தீவு என அழைக்கப்படும்

- மூத்த காங்கிரஸ் தலைவரும் கர்நாடகாவின் முன்னால் முதல்வருமான தரம் சிங் (வயது 80) ஜுலை 27 அன்று காலமானார். கர்நாடகாவின் 17-வது முதல்வாரன இவர் ஜெவர்கி தொகுதியில் தொடர்ந்து ஏழு முறை வென்றுள்ளார்.

- செப்டம்பர் 12-14 2017-ல் ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபே அவர்கள் இந்தியா வருகைபுரியவுள்ளார். அப்பொழுது இந்தியாவின் முதல் புல்லட் ரயில் திட்டமான "Mumbai-Ahmedabad High-Speed Rail (MAHSR) திட்டம் தொடங்கப்படவுள்ளது.

- இந்திய வியாபாரங்கள் மற்றும் அமைப்புகளுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட "கைசாலா" எனும் செயலியை மைக்ரோசாப்ட் இந்தியா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

- "பிரிக்ஸ்" தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர்களின் கூடுகை (BRICS Labour & Employment Ministers' Meet) ஜீலை 26,27 தேதிகளில் சீனாவின் சோங்கிங் நகரில் நடைபெற்றது. இக்கூடுகையில் இந்தியாவின் சார்பில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் பண்டாரு தத்ராத்ரேயா கலந்து கொண்டார்.

OXFORD IAS ACADEMY

- தென்சீனக்கடல் பகுதியில் எரியக்கூடிய பனி என்று அழைக்கப்படக்கூடிய மீத்தேன் ஹைட்ரேட்டில் இருந்து இயற்கை எரிவாயுவை சீனா சோதனை ரீதியில் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது.

- நிலநடுக்க அளவுகள் மற்றும் பெருங்கடல் மாற்றங்கள் குறித்த தகவல்களை தெரிவிக்க மத்திய புவி அறிவியல் அமைச்சகம் “இந்தியா குவேக்” மற்றும் “சாகர் வாணி” என இரண்டு அலைபேசி செயலிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
  இந்தியா குவேக் செயலி - இடம், நேரம், நிலநடுக்க அளவுகள் ஆகியவற்றை நிலநடுக்கம் நடைபெற்றபின் தகவல் தரும்.
  சாகர் வாணி செயலி – பெருங்கடல் அலை விவரங்கள், ஆழிப்பேரலை எச்சரிக்கை மற்றும் பெருங்கடல் சார்ந்த விவரங்களை தெரிவிக்கும்.

- இந்தியாவின் முதல் அலைபேசி பயணச்சீட்டு முறையை மும்பை மெட்ரோ அறிமுகப்படுத்தியுள்ளது. பயணிகள் தங்களின் அலைபேசியில் உள்ள “On-Go” செயலி மூலம் தினசரி அல்லது மாதாந்திர பயணச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியும்.

- “பிரிக்ஸ்” நாடுகளுக்கான தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களின் கூடுகை 2017 ஜுலை 27-ல் சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்றது. இதில் இந்தியாவின் சார்பில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் கலந்துகொண்டார்.

- தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் 29 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தில் 10,500 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தில் இருந்து கிடைக்கிறது என மின்சாரத்துறை செயலர் விக்ரம் கபூர் தெரிவித்துள்ளார்.

- ஐ.நா சபையின் 72-ம் ஆண்டு பொதுச்சபை கூட்டம் ஆகஸ்ட் மாதம் 19-ல் துவங்கி 25-ல் முடிவடைகிறது. இந்த கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடிக்கு பதிலாக வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

OXFORD IAS ACADEMY